*59*

# ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து

## (19:7-10)

*நான் இந்தப் பாடத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கையில், அழகிய வகையில் அச்சுப்பதிப்பிக்கப்பட்ட பின்வரும் அழைப்பிதழ் ஒன்று எனக்கு தபால் மூலமாக வந்து சேர்ந்தது:*

*திருமதி மற்றும் திருவாளர் டேவிட் எல். ரோப்பர்*
*அவர்களின் மகள்*
*ஆஞ்செலா கே. ரோப்பர்*
*திருமதி மற்றும் திருவாளர். பார்ரி லவ்ஜாய் அவர்களின் மகன்*
*டேன் ஹாரிஸ் லவ்ஜாய்*
*ஆகிய இருவரும் நமது கர்த்தரின் ஆண்டான*
*ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொன்னூற்றெட்டு*
*டிசம்பர் மாதம் பன்னிரெண்டாம் தேதி சனிக்கிழமையன்று*
*தங்கள் இணைவு மற்றும் திருமண வாக்குறுதிகளை*
*ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வுக்கு*
*தங்களின் மேலான வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர் ... .*

*நீங்கள் கற்பனை செய்யக்கூடியபடி, இந்த அழைப்பிதழ் எனக்கு மிகவும் பிரியமானதாக இருக்கிறது. இப்படிப்பட்ட அழைப்பிதழானது அகமகிழ்வு, எதிர்பார்ப்பு, மற்றும் நிறைவேற்றம் ஆகியவற்றை மறைமுகமாய் உணர்த்துகிறது. இதேபோன்ற ஒரு அழைப்பிதழ் வெளிப்படுத்தின விசேஷம் 19ல் காணப்படுகிறது - இதுவும் ஒரு திருமண அழைப்பாகவே உள்ளது, ஆனால் இது மிகவும் எல்லையற்ற வகையில் விலைமதிப்புள்ளதாக இருக்கிறது.*

*நமது முந்திய பாடம், 19ம் அதிகாரத்தின் "அல்லேலூயா!" என்ற பல்லவியின்மீது மையங்கொண்டு இருந்தது. நான் 6ம் வசனத்துடன் தன்னிச்சையாக நமது பாடத்தை நிறுத்தி வைத்தேன், ஆனால் அந்தப் பாடல் 7ம் வசனத்திற்குள் தொடருகிறது: "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம், ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்." ("ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து" என்ற விளக்க படத்தைக் காணவும்.) திருமணம் பற்றிய ஆய்வுக்கருத்து*

*அடுத்த இருவசனங்களில் தொடருகிறது. நீங்கள் 8 மற்றும் 9 ஆகிய வசனங்களை வாசிக்கையில், பின்வரும் அழைப்பிதழுக்கு விசேஷித்த கவனம் செலுத்துங்கள்:*

> *சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான் களுடைய நீதிகளே. பின்னும் அவன் என்னை நோக்கி, " ' ஆட்டிக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப் பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான்.' " ...*

*பிற்பாடு, வெளிப்படுத்தின விசேஷம் தனது உச்சக்காட்சியை அடையும்போது, "புதிய எருசலேம்" நகரமானது, "தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி (வருவதைக் கண்ணோக்குவோம்), அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போலிருக்கும்" (21:1).[1] "புதிய எருசலேம்" என்பது "ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டி" என்று விவரிக்கப்படும் (21:9).*

*இந்த திருமண உருவகத்தின் தனிச்சிறந்த குறிப்பர்த்தம் என்னவாக உள்ளது? ஆட்டுக்குட்டியானவருக்கும் அவரது மணவாட்டிக்கும் எப்போது திருமணம் நடைபெறும்? திருமண விருந்து என்பது என்னவாக இருக்கிறது? யாருக்கெல்லாம் அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது? இதற்கும் நமக்கும் தொடர்பு என்ன? இந்த வினாக்களுக்கும் மற்றவற்றிற்கும் இப்பாடத்தில் நாம் விடையளிக்க முயற்சி செய்வோம். "ஆட்டுக்குட்டியானவருடன் எனக்குள்ள உறவுமுறை என்ன?"; "அவருடைய மறுவருகைக்கு நான் தயாராயிருக்கின்றேனா?" என்று ஒவ்வொரு நபரும் தமக்குள் கேட்டுக்கொள்ளும்படி ஊக்குவித்தலே நமது குறிக்கோளாக உள்ளது.*

## ஆய்வுக்கருத்துக்கள்

*வெளிப்படுத்தின விசேஷம் 19:7-9 வசனப்பகுதியானது, "கிறிஸ்தவ இலக்கியத்தில் இதற்கு முன்பு பயன்படுத்தப்பட்டுள்ளதும், ஆனால் ஒரு தனிப்பட்ட சந்தர்ப்பப்பொருளில் (அனைத்தும் இணைந்து) பயன்படுத்தப்பட்டிராததுமான மூன்றிற்கு குறையாத பழைய ஏற்பாட்டு சிந்தனைகளின் இழையை ஒன்றாகப் பிணைக்கிறது."[2]*

*முதலாவது, தேவனுக்கும் மனித குலத்துக்கும் இடையிலான உறவுமுறையை விவரிக்க திருமண அடையாளத்துவம் உள்ளது. பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் மக்களினம் தேவனுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டிருந்ததாகச் சித்தரிக்கப்பட்டது (ஏசாயா 50:1; எரேமியா 2:32; ஓசியா 2:19, 20).[3] இந்த உருவகம் புதிய ஏற்பாட்டிலும் திரும்பக் கூறப்பட்டுள்ளது.[4] திருமணம் என்ற அடையாளத்துவமானது சுவிசேஷப் புத்தகங்கள் முழுவதிலும் கடந்தோடுகிறது. மணவாளன் மற்றும் அவனது நண்பர்களைப் பற்றி நாம் வாசிக்கின்றோம் (மத்தேயு 9:15; 25:1; மாற்கு 2:19; யோவான் 3:29), மற்றும் திருமண விருந்து, திருமண உடைகள் ஆகியவை பற்றியும் நாம் வாசிக்கின்றோம் (மத்தேயு 22:2, 11, 12; லூக்கா*

*12:35, 36ஐயும் காணவும்).*

*சபையைக் கிறிஸ்துவின் மணவாட்டி என்று பவுல் அடிக்கடி குறிப்பிட்டுள்ளார். கொரிந்துவில் இருந்த சபைக்கு, "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் ..." என்று அவர் கூறினார் (2 கொரிந்தியர் 11:2). ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்'' என்று அவர் கூறினார் (ரோமர் 7:4). இந்த ஆய்வுக்கருத்தைப் பற்றிப் பவுல் எழுதியவற்றில், அனேகமாக மிகவும் அர்த்தம் செறிந்த வசனப்பகுதியானது, எபேசுவில் இருந்த சபைக்கு அவர் எழுதிய நிருபத்தில் காணப்படுகிறது:*

> *புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்த மாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாக பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனு மில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன் (எபேசியர் 5:25-32).*

*திருமண உறவு போல் மிகவும் நெருக்கமான அல்லது ஒன்றிணைந்த மனித உறவு வேறு எதுவும் கிடையாது. திருமணம் எப்படி இருக்க வேண்டும் மற்றும் அது எப்படி இருக்கக்கூடும் என்பதற்கான ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நினைத்துப் பாருங்கள். இவை எல்லாமும் மற்றும் இவற்றிற்கு அதிகமானவைகளும், கிறிஸ்துவுக்கும் அவரது சபைக்கும் இடையில் உள்ள உறவில் உள்ளடங்கி இருக்கின்றன.*

*இரண்டாவது இழையாக உள்ளது, ஐக்கியம் மற்றும் அகம்மகிழ்வு ஆகியவற்றிற்கு உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள உணவு அல்லது விருந்து என்பதாகும். இந்த உருவகமானது, பழைய ஏற்பாட்டில், கிறிஸ்தவத்தின் ஆசீர்வாதங்களினுடைய உலகளாவிய தன்மையைத் தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு பயன்படுத்தப்பட்டது: "சேனைகளின் கர்த்தர்*

*இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்; ... அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார். கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து'' (ஏசாயா 25:6-8அ). இதேபோன்றதொரு நுட்பக்கருத்தை இயேசு, "கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்து ஜனங்கள் வந்து, தேவனுடைய இராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள்'' என்று கூறியபோது (லூக்கா 13:29) பயன்படுத்தினார்.[5]*

*உணவு உண்ணுதலைக்காட்டிலும் அதிகம் பொதுவாகச் செய்யப்படுபவை ஒருசில செயல்களே ஆகும். இருந்தபோதிலும், விசேஷ வைபவங்கள் எழும்போது, மற்றவர்களுடன் உணவருந்த அமருதல் என்பது, எவ்வித மாறுபாடும் இன்றி, கொண்டாட்டத்தின் இன்றியமையாத பாகமாக உள்ளது.*

*மூன்றாவது இழையாக, நடத்தையில் மாற்றத்தைக் குறிக்கும் வகையில் உடையணிதல் என்ற உருவகமாகும் (ஆதியாகமம் 35:2; ஏசாயா 52:1; 61:10; சகரியா 3:4). பவுல் கிறிஸ்தவர்களுக்கு, பாவம் நிறைந்த வழிகளைக் "களைந்துபோடும்" படியும், நீதியை "தரித்துக்கொள்ளும் படியும்" அடிக்கடி கூறினார் (ரோமர் 13:12, 14; எபேசியர் 4:22, 24; கொலோசெயர் 3:8-10).*

## *பின்னணி*

*திருமணங்கள், விருந்துகள் மற்றும் உடைகள் என்ற இந்த மூன்று உருவகங்களும் வெளிப்படுத்தின விசேஷம் 19ல் எவ்வாறு ஒன்றுகூடிக் கலந்துள்ளன என்பதை நாம் மதித்து உணருவதற்கு, யூதர்களின் திருமணச் சடங்குகளைப் பற்றிச் சில விஷயங்களை நாம் அறிந்தாக வேண்டும். ஒருசில வழிகளில், அவர்களின் சடங்குகள் நம்முடையவைகளைப் போன்றே இருந்தன; மற்ற வழிகளில், அவைகள் மாறுபட்டிருந்தன.[6]*

*யூதத்துவத் திருமண நடவடிக்கையானது நியமிக்கப்படுதலில் இருந்தே தொடங்குவதாயிருந்தது.[7] இந்த நியமிக்கப்படுதல் என்பது நமது நிச்சயதார்த்த நிகழ்ச்சி போன்றதாகவே இருந்தது, ஆனால் இதைக்காட்டிலும் அதிகம் கட்டுவிப்பதாயிருந்தது. ஒரு பெண் ஒரு ஆணுக்கு நியமிக்கப்பட்ட பின்பு, திருமணம் இன்னும் நடைபெறாதிருந்தாலும், திருமணம் இன்னும் நிறைவேற்றம் அடையாதிருந்தாலும் (அதாவது, கணவனும் மனைவியும் குடும்ப உறவு கொள்ளாதிருந்தாலும்), அவள் அவனது மனைவியாகவே கருதப்பட்டாள் (ஆதியாகமம் 29:21ஐக் காணவும்). அவள் தனது கணவனுக்கு உண்மையுள்ளவளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டாள் (உபாகமம் 22:23, 24). இந்த உறவு, மரணம் அல்லது விவாகரத்து என்பவற்றால் மாத்திரமே முடிவுக்குக் கொண்டுவரப்படக்கூடும்.*

*மரியாளுக்கும் யோசேப்புக்கும் நடைபெற்ற திருமண நியமனம் அனேகமாக இதற்கு மிகவும் நன்கு பழக்கமான விவரிப்பாயிருக்கலாம். ''மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று*

காணப்பட்டது" (மத்தேயு 1:18). அவளை விவாகரத்துச் செய்துவிடலாம் என்று யோசேப்பு ஆலோசித்துக்கொண்டிருந்தார் (வசனம் 19); ஆனால் அவரிடத்தில் ஒரு தூதன் தோன்றி, "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது" என்று கூறினார் (வசனம் 20). யோசேப்பு, "கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்ட படியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டார்" (வசனம் 24). மூலவசனத்தில், வசனம் 20 மற்றும் 24 ஆகியவற்றில் "as" என்பது இல்லை. நேரடி அர்த்தத்தில், வசனம் 20ல் யோசேப்புக்கு, "உன் மனைவி மரியாளைச் சேர்த்துக்கொள்" என்று கூறப்பட்டது, மற்றும் வசனம் 24ல், அவர் "தனது மனைவியை சேர்த்துக்கொண்டார்."[8] மரியாளுக்கும் யோசேப்புக்கும் திருமண நிச்சயதார்த்தம் (நியமித்தல்) நடந்த உடனே, அவர்கள் இருவருக்கும் திருமணம் நடக்கும் முன்பேகூட, அவள் அவருடைய மனைவியானாள்.

திருமண நியமனம் நடைபெற்றபின் திருமணம் நடைபெறுவதற்கு முன்புள்ள காலம் குறுகியதாக அல்லது நீண்டதாக இருக்கலாம்,[9] இது சூழ்நிலைகளைப் பொறுத்ததாக இருந்தது. இந்தக் காலம் எவ்வளவாக இருந்தாலும், இது எதிர்பார்ப்பு, தூய்மை, மற்றும் ஆயத்தப்படுதல் ஆகியவை உள்ளடங்கியதாக இருந்தது. ஆயத்தப்படுதலின் ஒரு பகுதியாக, மணப்பெண் தனது திருமண உடைகளை ஏற்பாடு செய்வாள். திருமணப் பரிசம் கொடுத்தல் என்பது மணமகன் சார்பில் நடைபெறும் ஆயத்தப்படுதலில் உள்ளடங்கும் (ஆதியாகமம் 34:12ஐக் காணவும்).

கடைசியில் திருமணம் நடைபெறும் காலம் வந்தது. வில்லியம் ஹென்ரிக்சென் என்பவர் இந்தக் கொண்டாட்டத்தைப் பின்வருமாறு விவரித்தார்:

> மணமகள் தன்னை அலங்கரித்து ஆயத்தமாகிறாள். மணமகன் தனது மிகச்சிறந்த உடையை அணிந்து, தனது நண்பர்கள் புடைசூழ வருகின்றார், அவர்கள் பாடிக்கொண்டு, தீவட்டிகளை ஏந்திக்கொண்டு, நியமிக்கப்பட்ட பெண் இருக்கும் வீடுநோக்கி ஊர்வலமாய் வருகின்றனர். அவர் மணப்பெண்ணைப் பெற்றுக்கொண்டு அவளையும் கூட்டிக்கொண்டு, திரும்ப ஊர்வலமாகத் தனது சொந்த இல்லத்திற்கு அல்லது தனது பெற்றோரின் இல்லத்திற்குத் திரும்புகின்றார், ...[10]

அழைக்கப்பட்ட விருந்தினர்கள்,[11] ஒருவாரம் இருவாரங்கள் நீடித்திருக்கும் திருமண விருந்தில் மகிழ்ச்சியான தம்பதியுடன் சேர்ந்து கலந்து கொள்வார்கள். அது அகமகிழும் காலமாயிருக்கும்.[12]

இயேசுவுக்கும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கும் இடையில் உள்ள விசேஷித்த உறவை வலியுறுத்த புதிய ஏற்பாட்டில் இந்த உருவகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. சபையைக் கிறிஸ்துவின் மணவாட்டி என்று பவுல் சித்தரித்து இருந்ததை நாம் எற்கனவே கண்டுள்ளோம். இயேசு தமது மணவாட்டிக்காகக் கிரயமாக செலுத்த வேண்டியிருந்தது அவருடைய

*சொந்த இரத்தமே (நடபடிகள் 20:28). அழகிய பழைய பாடல் ஒன்று பின்வருமாறு அறிவிக்கிறது,*

*தம் மணவாட்டியாக*
*வந்ததைத் தேடினார்,*
*தமக்கு சொந்தமாக*
*மரித்ததைக் கொண்டார்.*[13]

*நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது, சபையின் அங்கமானோம் (நடபடிகள் 2:47; 1 கொரிந்தியர் 12:13*[14]*), இவ்விதமாய் (கிறிஸ்துவின்) மணவாட்டியினுடைய அங்கமானோம். தற்போது நாம் "நியமிக்கப்பட்ட" காலத்தில் வாழ்கின்றோம், மணவாளன் "நம்மை த் தமது இல்லத்திற்கு'' அழைத்துச் செல்வதற்காகக் காத்திருக்கின்றோம்.*[15] *"சபையானது பூமியின்மீது ... இருகாலங்களுக்கு இடையில் உயிர்வாழ்கிறது, இது கிறிஸ்துவுக்கு நியமிக்கப்பட்டுள்ளது, ஆனால் உடன்படிக்கையின் நிறைவேற்றத்திற்காகக் காத்திருக்கிறது."*[16] *இப்போது இயேசுவுடன் நமது உறவு இனிமையாக உள்ளது (1 பேதுரு 1:8), ஆனால் நாம் அவரை முகமுகமாய்க் காணும்போது அது இன்னும் இனிமையாக இருக்கும் (1 யோவான் 3:2). நமது காத்திருக்கும் காலம் என்பது, எதிர்பார்ப்பு, தூய்மை மற்றும் ஆயத்தப்படுதல் ஆகியவற்றினால் பண்புபடுத்தப்படவேண்டும்.*

*தங்கள் வாக்குறுதிகளில் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருப்பவர் களுக்காக இயேசு, விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ திரும்பி வருவார். அவர் தமது சீஷர்களிடத்தில், "நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்று கூறினார் (யோவான் 14:3). மணவாளன் தமது மணவாட்டியை உரிமைகோருவதற்காக "தமது மகிமையில், தம்முடன் தூதர்கள் யாவரும் புடை சூழ" வருவார் (மத்தேயு 25:31). பின்பு, தயாராக இருப்பவர்கள் ''கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1 தெசலோனிக்கேயர் 4:17).*

*நமது கொண்டாட்டத்தின் காலம் - உங்களுக்கு விருப்பமாயிருந்தது என்றால், திருமண விருந்து - என்பது ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் கால அளவல்ல, ஆனால் நித்தியம் முழுவதற்கும் இருக்கும். கர்த்தர் நம்மோடு வாசமாய் இருப்பார், நாம் அவரது மக்களாய் இருப்போம். " ... கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின" (வெளிப்படுத்தின விசேஷம் 21:3, 4)!*

*இது - நாம் இப்போது மகிழ்வுடன் அனுபவிக்கும் மற்றும் நித்தியத்தில் அனுபவிக்க விரும்பி நாடியிருக்கும் ஆவிக்குரிய உறவின் - அழகிய சித்தரிப்பாய் இருப்பதில்லையா?*

## *சந்தோஷம் (19:7அ)*

*அதுவே, வெளிப்படுத்தின விசேஷம் 19:7-10ன் அடிப்படைக் கருத்துத் தாக்கமாக உள்ளது, ஆனால் இவ்வசனப்பகுதியில் நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விபரங்களும், நாம் விரிவாக்க அவசியமான சிந்தனைகளும் இன்னும் நிறைய உள்ளன. இப்போது நாம் இவ்வசனப்பகுதியின் ஊடே கடந்து செல்லுவோம்.*

*வெற்றிகொண்ட திரளான கூட்டத்தார் தேவனுக்குத் துதிகளைப் பாடும் காட்சியை மறுபடியும் மனதில் சித்தரித்துக் கொள்ளுங்கள். அவர்கள் முதலில், தேவன் செய்திருந்தவற்றிற்காக அவரைத் துதித்தனர் (வசனங்கள் 1-4). பின்பு அவர்கள் அவர் செய்து கொண்டிருந்தவற்றிற்காக அவரைத் துதித்தனர் (வசனங்கள் 5, 6). கடைசியில் (இங்குதான் நமது வசனப்பகுதி தொடங்குகிறது) அவர்கள், அவர் செய்வதாக வாக்குத்தத்தம் செய்துள்ளவற்றிற்காக அவரைத் துதித்தனர்: "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியான வருடைய கலியாணம் வந்தது" (வசனம் 7அ).*

*"சந்தோஷப்பட்டு" மற்றும் "களிகூர்ந்து" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள வினைச்சொற்கள், புதிய ஏற்பாடு முழுவதிலும் இன்னும் ஒரே ஒரு இடத்தில் மாத்திரம், ஒன்றிணைந்து காணப்படுகின்றன; அதாவது மத்தேயு 5:12ல், "சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.'' இவ்விரு வசனப்பகுதிகளும் அடிப்படையிலே ஒரு விஷயத்தையே கூறுகின்றன: காலங்கள் கடினமாய் இருக்கலாம்; நாட்கள் இருளாய் இருக்கலாம்; உங்கள் கன்னங்கள் கண்ணீரால் நனைந்திருக்கலாம் - ஆனால் மேன்மையான நாள் முன்னெதிர்கொண்டு வருகிறது. கர்த்தர் தமக்குத் சொந்தமான வர்களுக்காக வருகின்றார்! "ஆட்டுக்குட்டியானவரின் கலியாணநாள் வந்தது'' என்பது "பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்" என்பதற்குத் சமமானதாக உள்ளது!*

*திருமண பழக்க வழக்கங்கள், இடத்திற்கு இடமும், காலத்திற்குக் காலமும் மாறுபடுகின்றன, ஆனால் சந்தோஷம் என்ற ஒரு உணர்வு எல்லா இடங்களிலும் எல்லாப் பழக்க வழக்கங்களிலும் உள்ள முக்கியமான பண்பாகும். எனது சிந்தையானது நான் ஆஸ்திரேலியாவில் இருந்த காலத்தை நோக்கிப் பின்செல்லுகிறது: அங்கு பல இளம் பெண்கள் தங்கள் திருமணக் கொண்டாட்டங்களில் ஒவ்வொரு மேஜையின்மீதும் ஒவ்வொன்றாக வைப்பதற்காக, கோழியைச் சமைத்து உண்பவர்களிடத்தில் இருந்து தங்களின் ''விருப்ப எலும்புகளை'' சேகரித்திருந்தனர். ஒரு மணப்பெண், மணப்பெண்ணின் குடும்பத்தார் மற்றும் மணப்பெண்ணின் பூமிக்குரிய உடைமைகள் எல்லாம் ஏற்றப்பட்ட லாரி ஒன்றை - மணமகனு டைய வீடுசெல்லும் வழியில் நான் கண்டது என்பது, பல ஆண்டுகளுக்கு முன்பு, துருக்கி நாட்டிற்கு நாங்கள் சென்ற பயணத்தில் எனது சிந்தையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு காட்சியாக உள்ளது. ரோமானியாவின்*

பிரசோவ் நகர்ப்புறப்பகுதியில் உள்ள பூங்கா ஒன்றில் இங்கும் அங்குமாக திருமணக் குழுக்கள் சிதறியிருக்க (மணமகள்கள் தங்கள் வெள்ளைத்திருமண உடைகளை உடுத்திய நிலையில் கலந்துகொண்ட) திருமண விருந்துகள் என்பவை மிக அதிகம் சமீபத்திய நினைவாக உள்ளது. நான் விவரித்துள்ள மேற்கண்ட காட்சிகள் ஒவ்வொன்றிலும் பின்வருவது பொதுவானதாக உள்ளது: மக்கள் புன்முறுவல் பூத்திருந்தனர்; மக்கள் மகிழ்ச்சியாய் இருந்தனர்; மக்கள் அகம்மகிழ்ந்திருந்தனர்.

அதுபோன்றே, கர்த்தர் தமது மணவாட்டியை உரிமைகோருவதற் கென்று திரும்பி வரும் வேளை, அகம்மகிழும் வேளையாய் இருக்கும். அதாவது, அவரது மறுவருகைக்கு ஆயத்தமாய் இருப்பவர்களுக்கு அது ஒரு அகம்மகிழும் வேளையாய் இருக்கும்.

## ஆயத்தப்படுதல் (19:7ஆ, 8)

இது நம்மை 7ம் வசனத்தின் கடைசிப் பகுதிக்குக் கொண்டு வருகிறது, இது திரளான கூட்டத்தார் பாடிய பாடலின் முடிவுரையாக உள்ளது: "அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்" (வசனம் 7ஆ).

நீங்கள் எப்போதாவது ஒரு திருமணத்திற்கு ஆயத்தப்பட்டிருந்தீர்கள் என்றால், அதில் அதிகம் செய்ய வேண்டியவை உள்ளன என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.[17] நமது வசனப்பகுதி - திருமண உடைகளை அளித்தல் என்ற - அந்த தயாரிப்பின் ஒருபகுதியின்மீது கவனம் குவிக்கிறது: "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதியே"[18] (வசனம் 8). திருமணத்தைப் பற்றிப் பெண்கள் கலந்துரையாடும் போது, "மணப்பெண்ணின் உடை எவ்வாறு இருந்தது?" என்பது எவ்வித மாறுபாடும் இன்றிக் கேட்கப்படும் ஒரு கேள்வியாக உள்ளது. இவ்விஷயத்தில், "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்" என்பது பதிலாயிருக்கும்.

இந்த சுத்தமும் பிரகாசமுமான, மெல்லிய வஸ்திரம் என்பது தூய்மையின் அடையாளத்துவமாக உள்ளது.[19] பவுல் பின்வருமாறு கூறினார்,

> ... கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபேசியர் 5:25-27).

நாம் தண்ணீருக்குள் முழுக்காட்டப்படும் (ஞானஸ்நானம் பெறும்) போது, இயேசுவின் இரத்தம், நமது பாவங்களில் இருந்து நம்மை சுத்திகரிக்கிறது (நடபடிகள் 22:16). நமது ''வாழ்வின் - உடைகள்'' இரத்தத்தினால் வெண்மையாக்கப்படுகின்றன (வெளிப்படுத்தின விசேஷம் 7:9, 14); நாம் இயேசுவுடன்கூட உடுத்துவிக்கப்படுகின்றோம் (கலாத்தியர்

*3:27). பின்பு நாம் தொடர்ந்து வசனத்தின் வெளிச்சத்தில் நடந்து கொண்டிருக்கவேண்டும், அதன் மூலமாக அந்த இரத்தம் நம்மைத் தொடர்ந்து சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7). நாம் நம்மை நமது மணவாளருக்காகத் தூய்மையாகக் காத்துக்கொள்வது அவசியமாய் இருக்கிறது; நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.*

*8ம் வசனம் இரு சிந்தனைகளை ஒன்றுகலக்கிறது: நமது இரட்சிப்பில் தேவனுடைய பங்கும் நமது பங்கும். ''மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது''[20] என்ற வார்த்தைகளில் தேவனுடைய பங்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. ''அளிக்கப்பட்டது'' என்ற சொற்றொடர், தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்பதை வலியுறுத்தும் வகையில் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது (6:2, 8; 13:7, 14; 16:8). நாம் நமது சுய வல்லமையினால் நமது "உடைகளை"ச் சுத்திகரிக்க வழியெதுவும் இல்லை; நாம் தேவனுடைய இரக்கத்தைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இரத்தம் சுத்திகரிக்கும் முகமைப்பொருள் இல்லாத நிலையில் நம் வாழ்வு யாவும் "அழுக்கான கந்தையாய்'' இருக்கின்றன (ஏசாயா 64:6;* KJV*). சுத்திகரிக்கப்படுவதற்கான வழிமுறைகள், வாய்ப்பு மற்றும் பலம் ஆகியவற்றைக் கர்த்தர் நமக்கு அளிக்கின்றார் - மற்றும் பின்பு அவரது கிருபையுள்ள மன்னிப்பையும் நம்மீது பொழிகின்றார். ஆகையால் "நாம், சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம்" (வசனம் 7அ).*

*இது, நமது பகுதியில் முயற்சி எதுவும் தேவையில்லை என்று அர்த்தப்படுவதில்லை. நமது இரட்சிப்பில் நமது பங்கானது 8ம் வசனத்தின் பின்வரும் வார்த்தைகளினால் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது: "அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே* [*righteous acts*[21]]*." இந்த சொற்றொடர் "மணவாட்டியின் உடையானது, முடிவுபரியந்தம் நிலைநிற்பவர்களால் விசுவாச நிறைவில் கீழ்ப்படிதலுடன் செய்யப்படும் எண்ணற்ற செயல்களினால் நெய்யப்பட்டதாயிருக்கிறது என்று சுட்டிக்காண்பிக்கலாம்"*[22] *என்று இராபர்ட் மவுன்ஸ் என்பவர் கூறினார்.* H. L. *எல்லிசன் என்பவர் இதை, புதிய ஏற்பாட்டில் "மிகவும் நேசிக்கத்தக்க சித்தரிப்புகளில் ஒன்று" என்று விவரித்தார்:*

> *இந்தச் சித்தரிப்பு பரலோகத்தில் ஒரு மாபெரும் நெசவுத் தறி இருப்பது போன்ற நிலையை எழுப்பிற்று; நீதியுள்ள ஒவ்வொரு செயலும், அதாவது நாம் கிறிஸ்துவுக்குள் நீதியாய் இருத்தலினால் உண்டாக்கப்பட்ட ஒவ்வொரு செயலும், தூதன் என்ற நெசவாளிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருமண உடைத்தயாரிப்பில் பயன்படுத்தப் பட்டு, மணவாட்டிக்கு அல்ல, ஆனால் மணவாளனுக்கு மகிமையைக் கொண்டுவரும்படி வடிவமைக்கப்படுகிறது.*[23]

*ஹென்ரி ஸ்வீட் என்பவர் "சபை முழுமையும் ஒருங்கிணைந்த தூய்மையின் ... பிரகாசமான வெண்மை நிற உடையணிந்திருப்பதாகக் காணப்படுகிறது" என்று எழுதினார்.*[24]

*இன்றைய நாட்களில் கல்வியாளர்கள், இரட்சிப்பில் தேவனுடைய பங்கின் மீதான வசனப்பகுதிகளையும் மனிதனின் பங்கைப் பற்றிப் பேசும் வசனப்பகுதிகளையும் ஒப்புரவாக்கப் போராடுகின்றனர். சில வசனங்கள், நமது இரட்சிப்பைப் பொறுத்தமட்டில் தேவன் எல்லாவற்றையும் செய்துவிடுகின்றார் என்று கூறுவதாகக் காணப்படுகையில், மற்ற வசனங்கள், மனிதனே எல்லாவற்றையும் செய்கின்றான் என்று அர்த்தப்படுவதாக விளக்கப்படுத்தப்பட (உண்மையில் தவறாக விளக்கப்படுத்தப்பட)க் கூடியவைகளாய் இருக்கின்றன. தொடக்ககால எழுத்தாளர்கள் முரண்பாடாய்த் தோன்றும் இவ்விஷயம்பற்றி அவ்வளவாக அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் தேவனுடைய பங்கை மகிமைப்படுத்தினர்; அவர் இல்லாமல், இரட்சிப்பு என்பதே இருக்க முடியாது. அதே வேளையில், ஒவ்வொரு நபரும், தேவனுடைய இரட்சிப்பைத் தாம் ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதைத் தாமே முடிவு செய்கின்றனர் என்பதையும் அவர்கள் தெளிவாக்கினர். பர்ட்டன் காஃப்மென் என்பவர் இதைப் பின்வருமாறு குறிப்பிட்டார்: "தேவன் [மணவாட்டிக்கு] உடைகளைக் கொடுத்தார், ஆனால் அவள் அவற்றை அணிந்து கொள்ள வேண்டியதாய் இருந்தது!"[25]*

*மணவாளனின் வருகைக்கு நாம் எவ்வாறு தயாராகின்றோம்? விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலமாக நாம் கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கமாகின்றோம், பின்பு நாம் நம்மை "உலகத்தால் கறைபடாதபடி" காத்துக்கொள்கின்றோம் (யாக்கோபு 1:27). யோவான் பின்வருமாறு கூறினார்:*

> *பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக் கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்பட வில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கிறவண்ண மாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போ மென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான் (1 யோவான் 3:2, 3).*

*பவுல், "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிற படியால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" (2 கொரிந்தியர் 7:1) என்று எழுதினார். பேதுரு தமது இரண்டாம் நிருபத்தில் இதே கருத்தை ஏற்படுத்தினார் (2 பேதுரு 3:14).*

*ஒரு ஆண் ஒரு பெண்ணிடத்தில், அவளைத் தன் மனைவியாய் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுதல் என்பது அவன் அவளுக்கு அளிக்கக்கூடிய மாபெரும் கனமாய் உள்ளது. அந்தக் கனத்தை இயேசு நம்மீது அருளியிருக்கின்றார்! நாம் அந்த கனத்தைப் புரிந்துகொண்டு மதிக்கின்றோம் என்பதைக் காண்பிப்போமாக; நாம் கர்த்தருடைய பரிசுத்தமான மணவாட்டியாக நம்மையே நடப்பித்துகொள்வோமாக!*

## *அழைப்பு (19:9அ, ஆ)*

*பரிசுத்தவான்களின் "மெல்லிய வஸ்திரத்தை" யோவான் ஆழ்ந்து சிந்திக்கையில், அவரிடத்தில் யாரோ ஒருவர் பேசினார்: "பின்னும் அவன் என்னை நோக்கி, ... என்று என்னுடனே சொன்னான்" (வசனம் 9).* RSV *மற்றும்* NIV *வேதாகமங்களில்* "the angel said to me, ..." *என்றுள்ளது. இந்த நிகழ்ச்சியை 22:8, 9ல் உள்ள இதைப்போன்ற நிகழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், இந்த "யாரோ ஒருவர்" என்பது அனேகமாக தூதனாக இருந்திருக்கலாம், இது ஒருவேளை தரிசனங்களின் வரிசைத்தொடரை அறிமுகப்படுத்தியிருந்த தூதனாக இருந்திருக்கலாம் (17:1).[26] பேசியவர், அப்போஸ்தலரிடத்தில், "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது"[27] என்றுரைத்தார் (வசனம் 9அ). இது வெளிப்படுத்தின விசேஷத்தின் நான்காவது பாக்கியமாக உள்ளது, மற்றும் இது எண்ணிக்கையில் மட்டுமின்றி, கருத்திலும் மையத்துவமானதாக உள்ளது. பரலோகத்தில் நடைபெறவிருக்கும் திருமணகொண்டாட்டத்தில் பங்கேற்றிருத்தல் என்பதைக் காட்டிலும் பெரிய ஆசீர்வாதம் வேறு எதையும் கற்பனை செய்ய இயலாது.*

*"திருமண விருந்திற்கு அழைக்கப்பட்டவர்கள்" குறித்த அடையாளத்துவம் பற்றிச் சில குழப்பங்கள் நிலவுகின்றன, ஆனால் இவர்கள் கர்த்தருடைய அழைப்பிற்கு நேர்மறையாகப் பதில்செயல் செய்திருந்தவர்கள் - வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், உண்மைக் கிறிஸ்தவர்கள் - என்று சந்தர்ப்பப்பொருளானது ஆணையிடுகிறது. இந்த நேசிக்கத்தக்க அழைப்பிதழ் ஒவ்வொருவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது: "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (22:17). இருந்தபோதிலும், தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதினால் அழைப்பிதழை ஏற்றுக்கொள்பவர்கள் மாத்திரமே ஆசீர்வதிக்கப் படுவார்கள்.[28]*

*மணவாட்டி என்பது சபையின் உண்மையுள்ள உறுப்பினர்களைக் குறிக்கிறது என்று நாம் ஏற்கனவே வலியுறுத்திவிட்டு, இப்போது, அழைக்கப்பட்ட விருந்தினர்கள் என்பவர்கள் சபையின் உண்மையுள்ள உறுப்பினர்களைக் குறிக்கிறது என்று கருத்துத் தெரிவிப்பதால் குழப்பம் நிலவுகிறது.[29] ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள், "ஒரு மணப்பெண் அவளது திருமணத்திற்கே அழைக்கப்படுவது உண்டா?" என்று இகழ்ச்சியுடன் கேட்டுள்ளனர்.[30] இந்த விமர்சகர்கள், இறைவெளிப்பாட்டு மொழிநடையின் நீர்மத்துவ இயல்பைக் காணாது விடுகின்றனர். மேய்ப்பனாக இருக்கும் ஆட்டைப் பற்றி யாரேனும் எப்போதாவது கேள்விப்பட்டுள்ளனரா? இருந்தபோதிலும், வெளிப்படுத்தின விசேஷத்தில் ஆட்டுக்குட்டியானவரே மேய்ப்பராய் இருக்கின்றார் (7:17). அதுபோலவே, 19ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் முதலில், உண்மையுள்ளவர்களை மணவாட்டி என்று சித்தரிப்பதின்மூலம் ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்தினுடைய ஒரு அம்சத்தை வெளிப்படுத்திவிட்டு, பின்பு*

*உண்மையுள்ளவர்களை விருந்தினர்கள் என்று சித்தரிப்பதின்மூலம் இரண்டாவது அம்சத்தை வெளிப்படுத்துகின்றார். இது, இயேசுவைப் பின்பற்றுபவர்களை சிலவேளைகளில் அவரது மணவாட்டி (ரோமர் 7:2-4; 2 கொரிந்தியர் 11:2; எபேசியர் 5:23-33 ஆகியவற்றைக் காணவும்) என்றும், சில வேளைகளில் மணவாளனின் நண்பர்கள் (மத்தேயு 9:15; 25:1 ஆகியவற்றைக் காணவும்) என்றும் சித்தரிக்கிற புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதியுடன் சீர்பொருந்தியதாக உள்ளது.*

*நாம் ஒவ்வொருவரும் ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்திற்கு அழைக்கப்பட்டுள்ளோம், ஆனால் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதோ அல்லது புறக்கணிப்பதோ நம்மைப் பொறுத்ததாக உள்ளது. நேரக்குறைவு, சக்திக்குறைவு மற்றும் (சிலவேளைகளில்) ஆர்வக்குறைவு ஆகியவற்றின் காரணமாக நான் ஏற்றுக்கொண்டிராத பல அழைப்புகளை நான் பெற்றிருக்கின்றேன். ஒரு அழைப்பை மறுக்கையில் அவ்வப்போது நான் வருத்தப்படுவது உண்டு. ஆண்டவருடைய திருமண விருந்தின் அழைப்பைப் புறக்கணிக்கும் ஒவ்வொருவரும் நித்தியம் முழுவதிலும் வருத்தப்படுவார் என்று நான் உங்களுக்கு உறுதியாய்க் கூறுகின்றேன். (மத்தேயு 22:13ஐக் காணவும்.)*

*"ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து" என்று அழைக்கப்படும், நித்தியமான பரலோக வைபவத்தில் கலந்துகொள்ளும்படி அழைக்கப்படுதலைக் காட்டிலும் பெரிய ஆசீர்வாதம் வேறு எதையும் நாம் பெற்றுக்கொள்ள இயலாது. இது மிகுந்த அன்புசெலுத்த வேண்டிய மற்றும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அழைப்பாக உள்ளது!*

## ***உறுதிப்பாடு (19:9ஆ)***

*பரலோக செய்தியாளர், தமது கூற்றின் தனிச்சிறப்பை வலியுறுத்துவதற்காகத் திரும்பவும் பேசினார்: "இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்"[31] (வசனம் 9ஆ). வெளிப்படுத்தின விசேஷம் எல்லாவற்றிற்கும் இந்த உறுதிப்பாட்டை ஏற்படுத்த முடியும்,[32] பலர் இதை, 17:1ல் தொடங்கும் பகுதியின் பொழிப்புரை என்று நினைக்கின்றனர். இருப்பினும், இது நாம் படித்துக்கொண்டுள்ள வசனப்பகுதியைப் பற்றிக் கூறப்பட்டது என்பது மிகவும் உறுதியாகும். தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றி அவிசுவாசிகள் எள்ளி நகையாடலாம், ஆனால் நாம் அவற்றில் நிச்சயமாயிருக்க முடியும் என்று அறிய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்!*

*தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கு இவ்வகையான உறுதிப்பாடு அவசியமாய் இருந்தது. லியோன் மோரிஸ் என்பவர், 8ம் வசனத்தின் செய்தி "தான் இருந்த நிலைகளைக் கண்டறிந்த சபைக்கு மாபெரும் கருத்தாக இருந்தது. உபத்திரவத்தின் இடர்ப்பாடு மிகுந்த நாட்களில், துன்புறுத்துபவர்கள் அல்ல, ஆனல் துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களே பாக்கியவான்கள் என்பதைக் கிறிஸ்தவர்கள் அறிவது அவசியமாய்*

*இருந்தது."*[33] இன்றைய நாட்களில் நமக்கும் இந்த உறுதிப்பாடு இன்னமும் தேவைப்படுகிறது. மிகாயீல் வில்காக் என்பவர், நமது வேதவசனப்பகுதி, *"கிறிஸ்தவரின் வெளிக்கண்ணோக்கு முழுவதிலும் செயல்விளைவை ஏற்படுத்த வேண்டும். இது அவரது விகிதாச்சாரத்தின் உணர்வை மறுகட்டுமானம் செய்ய வேண்டும், மற்றும் அதனால் அவரது நம்பிக்கை, அவரது தைரியம், ஊக்கம் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றையும் மறுகட்டுமானம் செய்ய வேண்டும். இது அவரது பிரச்சனைகளை தாங்கிக்கொள்ளக் கூடியவையாக்குகிறது"*[34] என்று எழுதினார். அவர் பயன்படுத்திய கடைசி வார்த்தைகயை நான் மிகவும் விரும்புகின்றேன்: ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து பற்றிய போதனையானது நமது பிரச்சனைகள் எதையும் *தாங்கிக்கொள்ளக் கூடியவையாக்க வேண்டும்.*

## கவனக்குவிப்பு (19:10)

7முதல் 9 வரையிலான வசனங்களின் மாபெரும் சத்தியங்கள் யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டபோது, அவர் எதிர்பாராத சிலவற்றை, இம்மாபெரும் அப்போஸ்தலரின் பண்புக்கு ஒவ்வாத சிலவற்றைச் செய்தார்: அவர், *"அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன்"* என்று கூறினார் (வசனம் 10அ).

இந்த ஒப்புகையை மென்மையாக்க முயற்சி செய்வதில் கணிசமான நேரத்தைப் பல விளக்கவுரையாளர்கள் செலவிட்டுள்ளனர்: பேசியவர் இயேசு என்று யோவான் தவறாகப் புரிந்து கொண்டார் என்று ஒருவர் கோட்பாடு ஏற்படுத்தினார். உண்மையில் இவ்வாறு நடக்கவில்லை, இது தரிசனத்தின் ஒரு பாகமாய் இருந்தது என்று இன்னொருவர் வலியுறுத்தினார். இன்னும் ஒருவர், இந்த முழு நிகழ்ச்சியும் ஆசியா மைனர் பகுதியில், தூதர்களை ஆராதித்துக் கொண்டிருந்தவர்களின் பிரயோஜனத்திற்கான புதிர்க்கவிதை போன்றதாக இருந்தது என்று நம்பி, இணங்கினார். (கொலோசெயர் 2:18ஐக் காணவும்.) இது யோவான் கூறியபடியே நடந்தது என்று நான் நம்புகின்றேன், மற்றும் நடந்தவற்றை யோவான் பதிவு செய்தபோது அவரது கன்னங்கள் எரிந்து கொண்டிருந்தன.

ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் தங்கள் குறைபாடுகளைக் கூறுதல் என்பது அசாதாரணமானதாக இருந்ததில்லை. மோசே தமது பொறுமையை இழந்த வேளையையும் அதனால் கானான் நாட்டிற்குள் பிரவேசிக்கும் வாய்ப்பை இழந்துபோனதையும், அவரே பதிவு செய்தார் (எண்ணாகமம் 20:1-13). (தொடக்ககால எழுத்தாளர்கள் வலியுறுத்தியுள்ளபடி) மாற்கு சுவிசேஷ விபரங்கள் உண்மையில் பேதுருவின் விபரங்களாய் இருந்தால், பேதுரு இயேசுவை மறுதலித்தது பற்றி அவரே கூறத் தயங்கவில்லை (மாற்கு 14:66-72).

யோவானின் கணநேரத் தடுமாற்றமானது, அவரும் ஒரு மனிதப் பிறவியே என்பதையும், நம் யாவரையும் பாதிக்கிற பலவீனத்திற்கு அவரும் கீழ்ப்பட்டவராய் இருந்தார் என்பதையும் நிரூபிக்கும் ஆதாரமாக மாத்திரம்

*இருந்தது. வெளிப்படுத்தின விசேஷம் 19:10க்கு முன்பு, இந்த அப்போஸ்தலர் தரிசனங்களினால் பல மணி நேரங்கள் மோதப் பட்டிருந்தார் என்பதைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்களும் நானும் வெளிப்படுத்தின விசேஷத்தைச் சற்று நேரம் படித்துவிட்டு, பின்பு ஓய்வு எடுத்துக்கொள்கின்றோம்; ஆனால் யோவானின் கண்களும் காதுகளும், வசீகரமான தரிசனங்கள், திகைக்கவைக்கும் அடையாளங்கள் மற்றும் மிக வல்லமையான சத்தியங்கள் ஆகியவற்றினால் தொடர்ந்து நிரப்பப்பட்டிருந்தன. அவரது கண்கள் கிறங்கியும் அவரது காதுகள் ஒலியினால் மயங்கியும் இருந்திருக்க வேண்டும். பின்பு அவரிடத்தில், தேவனுடைய செய்தியாளர், ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தைப் பற்றிக்கூறி, இவையாவும் சத்தியமாயிருந்தன என்ற வியக்கத்தக்க உறுதிப்பாட்டைக் கொடுத்தார். இவை யாவற்றினாலும் யோவான் மேற்கொள்ளப்பட்டிருந்தார் என்று நான் நினைக்கின்றேன். நானும் அவ்வாறு ஆகியிருப்பேன் என்று நான் அறிவேன். இருப்பினும் இந்த நிகழ்ச்சியானது யோவானைச் சங்கடப்படுத்துவதற்காக மாத்திரம் பதிவுசெய்யப்படவில்லை என்பதில் நீங்கள் உறுதியாய் இருக்க முடியும், மாறாக, இதிலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்.*

*பேச்சாளரின் பாதத்தில் யோவான் விழுந்தபோது, அவர் (பேச்சாளர்) அதிர்ச்சியடைந்தார்: "அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட[35] உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்[36] … என்றான்" (வசனம் 10ஆ). (இவ்விடத்தில் பேசுவது தூதன் என்று யூகித்துக்கொண்டால்) தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் அடிப்படை வேறுபாடுகள் உள்ளன (எபிரெயர் 2:6-8), ஆனால் தூதர்களும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களும்[37] கர்த்தருடைய ஊழியக்காரர்களாய் இருக்கின்றனர் (கொலோசெயர் 4:7; எபிரெயர் 1:7, 14). இவர்களில் எவரும் வணங்கப்படக் கூடியவர்கள் அல்ல.*

*இவ்விதமாக செய்தியாளர் யோவானிடத்தில், ''தேவனைத் தொழுதுகொள்'' என்று கூறினார் (வசனம் 10இ). இதற்கு ஏறக்குறைய எழுபது ஆண்டுகளுக்கு முன்பு இயேசு, "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" என்று கூறியிருந்தார் (மத்தேயு 4:10). கிறிஸ்தவர்கள் தங்கள் மீது ஏற்படுத்தப்படும் வலியுறுத்தங்களின்போதும்கூட, பேரரசனை ஆராதிக்கக்கூடாது என்பதே அந்த நாளில் வெளிப்படுத்தின விசேஷம் 19:10ன் செய்தியாக இருந்தது.[38] நமது இருதயங்களிலும் சிந்தைகளிலும் கர்த்தருக்கு முந்திய இடத்தில் ஏதொன்றும் வரக்கூடாது என்பதே இன்றைய நாளில் நமக்கான செய்தியாக உள்ளது. சிலர் இன்னமும் தூதர்களை வணங்குகின்றனர், சிலர் தங்களின் மதத்தலைவர்களுக்கு முன் வணங்கி பணிந்துகொள்கின்றனர், ஆனால் இவ்வசனப்பகுதியும், 22:8, 9ம் இப்படிப்பட்ட செயல்களையும் எண்ணப்போக்குகளையும் கண்டிப்பாகத் தடைசெய்கிறது.[39] மிகவும் சாதாரணமாக, நம்மில் பலர் இவ்வுலகம் நமது "விக்கிரகமாகும்படி" அனு*

*மதித்து விடுகின்றோம் (கொலோசெயர் 3:5). வேதாகமம் தெளிவாக உரைக்கிறது: தேவன் ஒருவர் மாத்திரமே ஆராதிக்கப்பட வேண்டியவராய் இருக்கின்றார் (14:7; 19:5).*[40]

*இந்த சத்தியம், இதைப் பேசியவர் கூறிமுடித்த உருவகக் கூற்றிற்கான காட்சியை அமைக்கிறது: "இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது" (19:10ஈ). தீர்க்கதரிசனம் என்பது ஏவுதல் பெற்ற போதனையாக உள்ளது. "ஆவி" என்ற சொற்றொடர் இவ்விடத்தில் அனேகமாக, "சிலவற்றைப் பற்றிய உண்மையான கருத்தறிவு அல்லது தனிச்சிறப்பு: நியாயப்பிரமாணத்தின் ஆவி* [போன்றது]*" என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.*[41] *இவ்வசனப்பகுதியில் "ஆவி" என்பதற்குப் பதில் நாம், "சாராம்சம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம்.*[42] *இவ்வசனத்தில் "இயேசு" என்ற வார்த்தையின்மீதே வலியுறுத்தம் உள்ளது: இது இயேசுவைப் பற்றி இயேசுவினிடத்தில் இருந்து வருகிற, சாட்சியாக அதாவது ஏவுதல் பெற்ற போதனையாக உள்ளது (லூக்கா 24:44; யோவான் 5:46ஐக் காணவும்). மனிதர்கள் உயர்த்தப்படக்கூடாது; தூதர்கள் உயர்த்தப்படக்கூடாது; இயேசு மாத்திரமே உயர்த்தப்பட வேண்டும்.*[43]

*ஆகையால், இயேசுவை அனுப்பிய, சாட்சியை வெளிப்படுத்திய, இப்போது ஆட்டுக்குட்டியானவருடைய திருமண விருந்து வரப்போகிறது என்ற உறுதிப்பாட்டினால் நம்மை மெய்சிலிர்க்கத் செய்துள்ள தேவனையே நாம் தொழுதுகொள்வோமாக! "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள், நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம்" (19:7).*

## முடிவுரை

*சிலர் நமது வேதவசனப்பகுதியை நேரடி அர்த்தம் உள்ளதாக்க முயற்சி செய்துள்ளனர்: அவர்கள், பரலோகத்தில் நேரடியான அர்த்தத்தில் ஒரு திருமணம் நடக்கவிருப்பதாக முன்கண்ணோக்குகின்றனர். திருமண நிச்சயதார்த்தத்தில் முக்கியமான பங்கை ஏற்று நடத்திய பவுல்தான் (2 கொரிந்தியர் 11:2) இந்தத் திருமண நிகழ்ச்சியை நடத்தி வைப்பார் என்று ஒரு பிரசங்கியார் நம்பி இணங்கினார். இந்த மொழிநடை அடையாளத்துவமானது என்பதைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். அடையாளத்துவம் அழகுமிக்கதாக, மெய்சிலிர்க்க வைப்பதாக, இருதயத்தை அசைப்பதாக உள்ளது - ஆனாலும் அது இன்னமும் அடையாளத்துவமாகவே உள்ளது.*

*சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதை கேள்விப்படும்போது, நீங்களும் நானும் இந்தப் பரலோக அழைப்பைப் பெற்றுக்கொள்கின்றோம். நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டு தண்ணீரில் முழுக்காட்டப்படும்போது, நாம் கிறிஸ்துவுக்கு நியமிக்கப் (நிச்சயதார்த்தம் செய்விக்கப்)படுகின்றோம். நம்மில் அன்புகூர்ந்து நம்மைப் பராமரிக்கும் இயேசுவுடன், நாம் ஒரு புதிய, மன எழுச்சி மிகுந்த உறவைக் கொண்டுள்ளோம். இருப்பினும், அவர் தமது மணவாட்டியைப் பெற்றக்கொள்ளும்படித் திரும்ப வரும்போது இன்னும்*

அதிகம் வியப்புமிக்க உறவைப் பெறுவதை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

ஒரு நாளில் - அது விரைவாயிருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம்- அந்த நாள் வரும். அப்போது ஒவ்வொருவரும் இயேசுவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்பார்கள் (20:11-15), மற்றும் அவர் தம்முடையவர்கள் யார் என்பதை அடையாளம் கண்டுகொள்வார். பின்வரும் அவரது வார்த்தைகளைத் கேட்பது என்பது எவ்வளவு வியப்புமிக்கதாக இருக்கும்: ''வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்'' (மத்தேயு 25:34). இயேசுவுடனான நமது ஒன்றிப்பு முழுமையானதாக இருக்கும்; என்றென்றைக்கும் இருக்கும் திருமண வைபவம் தொடங்கும்!

இயேசுவுடன் உங்கள் உறவு என்னவாக உள்ளது? நீங்கள் அவரது சபையாகிய மணவாட்டியின் அங்கமாயிருக்கின்றீர்களா? நீங்கள் அவருக்காக உங்களைத் தூய்மையாகக் காத்திருக்கின்றீர்களா? அவரது வருகைக்கு நீங்கள் தயாராய் இருக்கவில்லையென்றால், அவரது கிருபையுள்ள அழைப்பிற்குப் பதில்செயல் செய்வதற்குமுன்னர் நீங்கள் இன்னொரு வாய்ப்பிற்காகக் காத்திருக்காமல் முன்வரவேண்டும் என்று நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன். விருந்து உங்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டுள்ளது. வாருங்கள்![44]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

இந்த பாடமும் இதற்கு அடுத்த பாடமும் ஒன்றிணைக்கப்பட முடியும். மைலோ ஹேட்வின்[45] என்பவர், வேதவசனத்தின் இவ்விரு பகுதிகளையும் பின்வரும் தலைப்பைக்கொண்டு கூறிமுடித்தார்: “விருந்தும் யுத்தமும்.” மையர் பேர்ல்மென்[46] என்பவர், ''திருமணமும் யுத்தமும்'' என்ற தலைப்பைப் பயன்படுத்தினார்.

---

குறிப்புகள்

[1]இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் காணப்படும் “சகலத்தையும் புதிதாக்குதல்” என்ற பாடத்தில் 21:2ன் மீதான விளக்கங்களைக் காணவும். [2]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 234. [3]ஏசாயா 54:1, 5-7; 62:5; எரேமியா 3:14; 31:32; எசேக்கியேல் 16:8 ஆகியவற்றையும் காணவும். [4]பழைய ஏற்பாட்டில் திருமண உருவகம் என்பது பெருமளவுக்கு, எதிர்மறைச் சந்தர்ப்பப்பொருளில் பயன்படுத்தப்பட்டது: இஸ்ரவேல் மக்களினம் தனது ஆவிக்குரிய கணவரான யெகோவாவுக்கு உண்மையற்ற வகையில் நடந்து

கொண்டிருந்தது. புதிய ஏற்பாட்டில், இந்த அடையாளத்துவம் மிகவும் நேர்மறையான வழியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. [5]ஐக்கியத்தைச் சுட்டிக்காட்டும் போஜனத்தின் அடையாளத்துவமானது வெளிப்படுத்தின விசேஷம் 3:20ல் பயன்படுத்தப்பட்டுளளது. [6]நான் அமெரிக்கப் பழக்க வழக்கங்கள் ஒருசிலவற்றை இவ்விடத்தில் குறிப்பிடுவேன். நீங்கள் உங்கள் சொந்தப் பகுதிகளின் திருமணப் பழக்கவழக்கங்கள் பற்றிய ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் ஆகியவற்றைச் சுட்டிக்காண்பிக்க விரும்பலாம். [7]நிச்சயதார்த்தத்திற்கு முன்பு, திருமணம் முடிக்கவிருக்கும் மணப்பெண் மற்றும் மணமகன் ஆகியோரின் பெற்றோர்களுக்கு இடையில் பொதுவாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும், இது பெரும்பாலும் தம்பதியாகவிருப்பவர்கள் சிறுபிராயமாய் இருக்கையிலேயே நடப்பதுண்டு. [8]KJV வேதாகமத்தில் காணவும். [9]ஏற்பாடுகள் மற்றும் திருமண விருந்து ஆகியவற்றிற்கு இடையிலான கால இடைவெளி, பத்துக் கன்னிகைகளின் உவமையில் மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது (மத்தேயு 25:1-13). [10]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids. Mich.: Baker Book House. 1954), 215.

[11]அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்குத் திருமண உடை இல்லாதபோது, பெரும்பாலும் அவர்களுக்குத் திருமண உடைகள் அளிக்கப்பட்டன. மத்தேயு 22:11, 12ல் உள்ள காட்சியானது, இந்தப் பழக்க வழக்கத்தை யூகித்துள்ளது; அந்த மனிதனுக்குத் திருமண உடை அளிக்கப்பட்டிருந்தது, ஆனால் அவன் அதை அணியாதிருப்பதைத் தேர்ந்து கொண்டான். [12]மத்தேயு 22 மற்றும் 25ல் இயேசுவால் கூறப்படும் திருமண - விருந்து பற்றிய உவமைகள், அந்தநாளில் இருந்த பழக்க வழக்கங்கள் சிலவற்றின்மீது ஒளிசிந்துகின்றன. உங்கள் உரையைக் கேட்பவர்கள் இந்த உவமைகளை அறியாதிருந்தால், இவற்றைக் குறித்து கலந்துரையாட நேரம் செலவிடுவதற்கு நீங்கள் விரும்பலாம். [13]Samuel J. Stone, "The Church's One Foundation," *Songs of Faith and Praise*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1996). [14]நடபடிகள் 2:47ஐப் பற்றி, KJV வேதாகமத்தில் காணவும். 1 கொரிந்தியர் 12:13ஐப் பற்றி, சபையே சரீரமாக உள்ளது (எபேசியர் 1:22, 23). [15]கிறிஸ்து மறுபடியும் வரும் வரையிலும் சபையானது உண்மையில் கிறிஸ்துவுக்குத் "திருமணம் செய்விக்கப்" பட இயலாது என்று சிலர் நம்புகின்றனர் - மேலும் அந்தத் தவறான கோட்பாட்டின் அடிப்படையில் தவறான முடிவுகளையும் அடைந்துள்ளனர். அவர்கள் நிச்சயதார்த்தத்தின் இயல்பைப் புரிந்துகொள்வதில்லை. சபை நிலைநாட்டப்பட்ட நாளில் இருந்தே அது கிறிஸ்துவின் மணவாட்டியாக இருந்து வருகிறது. [16]Thomas F. Torrance, *The Apocalypse Today* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 130. [17]உலகில் நீங்கள் வாழும் பகுதியில் திருமணத்திற்குச் செய்யப்படும் தயாரிப்புப் பணிகளின் மாதிரி விபரங்களைத் தருவதற்கு நீங்கள் விரும்பலாம். [18]19ம் அதிகாரத்தின் மணவாட்டியை அடையாளம் காணுதல் பற்றி இன்னமும் யாரேனும் கேள்வியைக் கொண்டிருந்தால், 8ம் வசனம் அவ்விஷயத்தைத் தெளிவாக்குவதாய் இருக்க வேண்டும்: மணவாட்டி திருமண உடை அணிந்திருந்தாள், ஆனால் பரிசுத்தவான்களின் நீதியுள்ள செயல்களே அவ்வுடையாய் இருந்தது; ஆகையால், மணவாட்டி = பரிசுத்தவான்கள். இது சபையே (அதாவது இரட்சிக்கப்பட்ட தனிநபர்களைக் கொண்ட சரீரமே) மணவாட்டியாக உள்ளது என்று கூறுவதற்கான இன்னொரு வழியாக மாத்திரம் உள்ளது. [19]இது 17ம் அதிகாரத்தின் பாவம் நிறைந்த வேசியின் ஆடம்பரமான உடைக்கு நேர்மாறாக உள்ளது. வேசி மற்றும் மணவாட்டி ஆகியோருக்கிடையில் பல நேர்மாறுகளை ஏற்படுத்த முடியும். "வெளிப்படுத்தின விசேஷம், 4" என்ற புத்தகத்தில் "பாபிலோன் உங்களை மோசம்போக்க முயற்சி செய்யும்போது" என்ற பாடத்தில் காணவும். [20]8ம் வசனத்தை 6:11 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

[21]"*Righteous acts*" என்பது கிரேக்க மொழியில் ஒரு தனி வார்த்தைக்குரிய மொழிபெயர்ப்பாகும்: இது "நீதி" என்பதற்குரிய பன்மை வார்த்தையாக உள்ளது [தமிழ் வேதாகமத்தில் இது "நீதிகளே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது]. "Righteousnesses" என்பது அழகற்ற தரவழைப்பாக இருக்கும். "Righteous acts" அல்லது "*Righteous deeds*" என்பதே மூலவசனத்தின் அர்த்தத்தைச் சரியாக வெளிப்படுத்துகிறது என்று பெரும்பான்மையான மொழிபெயர்ப்பாளர்கள் நினைக்கின்றனர். (KJV வேதாகமத்தில் "*righteousness*" [ஒருமை வடிவச்சொல்] என்றுள்ளது, ஆனால் NKJV வேதாகமத்தில் "righteous acts" என்றுள்ளது.) (ஆங்கில வேதாகமத்தில்) திருமண உடை தொடர்புடைய வசனப்பகுதியொன்று 22:14ல் காணப்படுகிறது, அதில் "தங்கள் அங்கிகளைத் தோய்த்து வெளுத்தவர்கள் பாக்கியவான்கள்" என்றுள்ளது. நமது உடைகள் இயேசுவின் இரத்தத்தினால் வெண்மையாக்கப்படுகின்றன, ஆனால் நாம் அவற்றை நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல் மூலமாக "தோய்த்து வெளுக்க" வேண்டும். [22]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 340. [23]H. L. Ellison, *1 Peter - Revelation,* Scripture Union Bible Study Books Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1969), 83. [24]Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillian Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 247. [25]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 443. [26]இவ்விடத்தில் பேசுபவரை அடையாளப்படுத்த மற்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன, அவற்றில், அவர் உண்மை நிறைந்த வகையில் வேதசாட்சியாக மரித்துப் பரலோகத்தில் இருந்த ஒருவராய் இருந்தார் என்ற கருத்தும் உள்ளடங்கும். இந்த சந்தர்ப்பப்பொருளில், தூதன் என்ற கருத்து நன்கு பொருந்துகிறது, ஆனால் பேசுபவர் யாராயிருப்பினும் பின்வரும் கருத்து ஒரே மாதிரியானதாகவே இருக்கும்: அவர் இயேசுவோ அல்லது யெகோவாவோ அல்ல, எனவேதான் அவர் ஆராதிக்கப்பட்டிருக்கப்படக்கூடாது. [27]வெளிப்படுத்தின விசேஷத்தின் இந்தத் தரிசனங்கள் மற்றும் போதனைகள் வெளிப்படுத்தப்பட்ட வேளையில் இவை யாவற்றையுமோ அல்லது ஒரு பகுதியையோ யோவான் பதிவு செய்தார் என்று நமக்கு மீண்டும் நினைவூட்டப்படுகிறது (1:11, 19; 2:1; 10:4; 14:13; 21:5). [28]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "புயலுக்கு மேலாக உயருதல்" என்ற பாடத்தில் 7:14இ வசனப்பகுதிக்கான குறிப்புகளைக் காணவும். நாம் சுவிசேஷப் பிரசங்கத்தினால் "அழைக்கப்பட்டு" இருக்கின்றோம் (1 கொரிந்தியர் 1:9; 2 தெசலோனிக்கேயர் 2:14ஐக் காணவும்). ஒரு அழைப்பை இலேசாக நினைத்தலைப் பற்றிக் கர்த்தர் என்ன நினைக்கின்றார் என்பது பற்றிக் காண்பதற்கு, மத்தேயு 22:1-14ஐக் காணவும். [29]இதற்கு ஒப்பான சூழ்நிலையொன்றை நாம், 12ம் அதிகாரத்தில் கண்டோம், அங்கு வரும் பெண்ணை நாம் சபை என்று அடையாளம் கண்டோம், மேலும் அவளது பிள்ளைகள் சபையின் உறுப்பினர்கள் என்றும் அடையாளம் கண்டோம். [30]இந்த விளக்கவுரையாளர்கள் பின்பு, அழைக்கப்பட்ட மற்ற நபர்களை அடையாளம் காண முயற்சி செய்கின்றனர். சபை = இயேசுவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டவர்கள் என்ற உண்மை காணப்பட்டபோதிலும், ஒரு எழுத்தாளர், விருந்தினர்களை "சபையின் அங்கத்தினர்களல்லாத இரட்சிக்கப்பட்டவர்கள்" என்று அடையாளப்படுத்தும் அளவுக்குத் துடுக்குத்தனம் கொண்டவராகவும் இருக்கின்றார். (நடபடிகள் 20:28; எபேசியர் 5:23, 25 ஆகியவற்றைக் காணவும்.)

[31]சிலர் இந்த வார்த்தைகளை, வெளிப்படுத்தின விசேஷத்தின் மொழிநடையை நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு நிருபணம் என்ற

வகையில் விளக்கம் தர முயற்சி செய்துள்ளனர் - ஆனால் "உண்மை" என்பது தானாகவே "நேரடி அர்த்தம்" என்பதாகிவிடுவதில்லை. ஹென்றி ஸ்வீட் என்பவர், "மெய்மைக்கான இந்த உறுதிப்பாடு மிகுந்த உரிமை கோருதல், இவ்விபரங்களின் நேரடி அர்த்தமான நிறைவேற்றத்தின் மீதுள்ள நம்பிக்கையை வேண்டுவதில்லை, இறைவெளிப்பாட்டுத் தீர்க்கதரிசனமானது, விளக்கத்திற்கான தனது சொந்த முறைமைகளையும் சட்டங்களையும் கொண்டுள்ளது, மற்றும் இவற்றின் மூலமாகவே மாணவர் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்" என்று எழுதினார் (Swete, 248). [32]உண்மையில் வேதாகமம் முழுவதற்கும் இவ்விஷயம் கூறப்பட முடியும். [33]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 221. [34]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation,* The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 173. [35]"இயேசுவின் சாட்சி" என்ற சொல்விளக்கத்தை, வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் இதற்கு முன்பு கண்டுள்ளோம் (1:2, 9). இது "இயேசுவைப் *பற்றிய* சாட்சி" என்றோ அல்லது "இயேசுவிடமிருந்து வந்த சாட்சி" என்றோ அர்த்தப்பட முடியும். இவ்விரு சொற்றொடர்களுமே "சுவிசேஷம்" என்பதுடன் அடிப்படையில் ஒருபொருள் பலசொல்லாகவே உள்ளன. [36]பேசுபவர், "நான் ஒரு உடன் அடிமை" என்றே நேரடி அர்த்தமாகக் கூறினார். [37]வசனப்பகுதியானது அடுத்து, "இயேசுவின் சாட்சி" என்பதை "தீர்க்கதரிசனத்துடன்" (ஏவுதல் பெற்ற போதனை) ஒப்பிடுகிறது என்பதால், இவ்வசனத்தில் "இயேசுவின் சாட்சியைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள்" என்பது யோவானையும் ஏவுதல் பெற்ற (பிற) அப்போஸ்தலர்களையும் மாத்திரம் தனிப்பட்ட வகையில் குறிக்கிறது என்று சிலர் நம்புகின்றனர். விஷயம் இதுவாக இருக்கலாம்; இருப்பினும் இதே சொற்றொடராக்கம், பொதுவாக உண்மையுள்ள கிறிஸ்தவர்களைக் குறிப்பதற்கு 12:17ல் பயன்படுத்தப்பட்டது, மற்றும் இது இவ்விடத்திலும் அனேகமாக அதுபோன்றே அர்த்தப்படுவதாக இருக்கலாம். எவ்வகையிலும் கருத்து மாற்றம் அடையாததாக உள்ளது: தேவனைத் தவிர வேறு எவரையும் ஆராதிக்கக்கூடாது. [38]ஒரு வேளை, வாசகர்களும் தாங்கள் தூதர்களை ஆராதிக்கக் கூடாது என்பதை கற்க வேண்டியிருக்கலாம் (கொலோசெயர் 2:18). [39]தூதர்களை வணங்கக்கூடாது என்றால், அழியக்கூடிய மனிதனையும் வணங்கக்கூடாது என்றே ஆகிறதல்லவா? (அப்போஸ்தலருடைய நடபடிகள் 10:25, 26; 14:11-18.) [40]இவ்வசனப்பகுதியானது, இயேசு தேவனாக இருக்கின்றார் என்பதை மறைமுகமாய் நிரூபிக்கிறது: தேவன் ஒருவர் மாத்திரமே ஆராதிக்கப்பட வேண்டும்; ஆனால் இயேசு பூமியில் இருந்தபோது, தம்மை வணங்குவதை ஏற்றுக்கொண்டிருந்தார் (யோவான் 9:35-38). இயேசுவைப் பற்றிபேசும்போது எபிரெயர் 1:6ம் வசனமானது, "தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக் கடவர்கள்" என்று கூறுகிறது. தேவன் ஒருவர் மாத்திரமே ஆராதிக்கப்பட வேண்டும் என்பதால் இயேசு தேவனுகவே (அதாவது, தெய்வீகத்துவமானவராகவே) இருக்கவேண்டும்.

[41]*American Heritage Dictionary,* 3rd ed., s.v. "spirit." [42]10ம் வசனத்தினுடைய கடைசிப் பகுதிக்குப் பல விளக்கவுரைகள் சாத்தியமானவைகளாய் இருக்கின்றன. (நவீன மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டு பார்க்கவும்.) சிலர் "ஆவி" என்பதைப் பரிசுத்த ஆவியின் கருத்தில் விளக்கப்படுத்துகின்றனர், இவர்கள் இயேசுவைக் குறித்த வெளிப்படுத்துதல்களில் பரிசுத்த ஆவியின் பங்கைக் குறிப்பிடுகின்றனர். சிலர் "ஆவி" என்பதற்குப் பதில், "ஏவுதல்" என்ற வார்த்தையை இடுகின்றனர். "ஆவி" என்ற வார்த்தை "காற்று" அல்லது "சுவாசம்" என்றும் மொழிபெயர்க்கப்படமுடியும் என்பதால், இயேசுவைப் பற்றிய சாட்சியானது ஏவுதல் பெற்றபோதனையின்

"வாழ்வினுடைய சுவாசமாக" உள்ளது என்று சிலர் நம்புகின்றனர். 10ம் வசனத்தின் வார்த்தைகளினால் அர்த்தப்படுவது எதுவாயிருப்பினும், ''இயேசு'' என்ற வார்த்தையிலேயே வலியுறுத்தம் உள்ளது, முடிவு என்பது ஒவ்வொரு விஷயத்திலும் உள்ளது போலவே இதிலும் உள்ளது: மேன்மைப்படுத்தப்படவேண்டியது இயேசுவையே. [43]பரலோக திருமணத்தைப் பொறுத்தமட்டிலும்கூட, இயேசுவே மேன்மைப்படுத்தப்படுகின்றார் என்பதை கவனியுங்கள். பூமிக்குரிய திருமணமானது பொதுவாக மணமகளைச் சுற்றிச் சுழலுவதாக உள்ளது, ஆனால் இந்தத் திருமணம், "ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமாக" உள்ளது (வசனம் 7). [44]நீங்கள் இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் உடனே பதில்செயல் செய்யும்படி உற்சாகப்படுத்துங்கள். [45]Milo Hadwin, *The Overcomers: Sermons on Revelation* (Arlington, Tex.: Mission Printing, n.d.), 195-203. [46]Myer Pearlman, *Windows Into the Future: Devotional Studies in the Book of Revelation* (Springfield, Mo.: Gospel Publishing House, 1941), 153-57.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள உறவை விவரிப்பதற்கு பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளபடி திருமணத்தின் அடையாளத்து வத்தைக் கலந்துரையாடவும். சபை என்பது கிறிஸ்துவின் மணவாட்டியாக உள்ளது என்ற பவுலின் போதனைக்கு விசேஷித்த கவனத்தைக் கொடுக்கவும்.
2. சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பதால், கர்த்தருடைய சபையின் உறுப்பினராக இருத்தல் என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது?
3. விருந்தின் அடையாளத்துவம், அகமகிழ்ச்சி அல்லது வைபவத்தின் உருவகமாக எவ்வாறு பயன்படுத்தப்பட்டது?
4. உடை உடுத்துதல் என்ற உருவகம், நடக்கையில் மாறுதல் என்பதை எவ்வாறு அறிவிக்கிறது?
5. யூதர்களின் திருமணப்பழக்க வழக்கங்களையும், நியமித்தல் மற்றும் நியமித்தலுக்கும் திருமண வைபவத்திற்கும் இடைப்பட்ட காலம் ஆகியவற்றின்மீது விசேஷித்த கவனம் செலுத்திக் கலந்துரையாடவும்.
6. நீங்கள் கலந்துகொண்ட மகிழ்ச்சியான திருமணம் ஒன்றைப் பற்றிக் கூறவும். மகிழ்ச்சிபொங்கும் அந்த வைபவம், நாம் இயேசுவுக்குள் கொண்டுள்ள உறவை எவ்வாறு விவரிக்கக்கூடும்?
7. திருமண உடையொன்றைத் தேர்ந்தெடுப்பது என்பது மணப்பெண் தனது திருமணத்திற்குத் தயார் செய்து கொள்ளுவதின் முக்கியமான பாகமாக உள்ளதா? நமது வசனப்பகுதியானது, மணவாட்டி சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்திருந்தாள் என்று கூறுகிறது. இது எதனை அர்த்தப்படுத்துகிறது என்று நீங்கள்

*நினைக்கின்றீர்கள்?*

8. *நமது “வாழ்வு - உடைகள்” எவ்வாறு சுத்திகரிக்கப்படுகின்றன? நாம் நமது வாழ்வைத் தூய்மையாகக் காத்துக்கொள்ளுதல் என்பதும் முக்கியமானதாக உள்ளதா?*
9. *நமது பாடம் ஒரு இரட்டை அடையாளத்துவத்தைக் கருத்தாக தெரிவிக்கிறது: மணவாட்டி என்பது சபையாக உள்ளது மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் சபையின் உறுப்பினர்களாக இருக்கின்றனர். வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் இதற்கு முன்பு இரட்டை அடையாளத்துவம் ஒன்றை எதிர்கொண்டிருக் கின்றோமா?*
10. *திருமண விருந்திற்கு அழைக்கப்பட்டுள்ளவர்கள் எந்தக் கருத்தில் “பாக்கியவான்களாய்” இருக்கின்றனர்? அழைக்கப்பட்டிருத்தல் போதுமானதா அல்லது அந்த அழைப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமா?*
11. *பரலோகத்தில் இருந்து வந்து பேசியவருக்கு முன்பாக யோவான் விழுந்து வணங்கியது ஏன் என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன? (இது ஒரு கருத்துக் கேள்வியாக, சரியான அல்லது தவறான பதில் என்று எதுவும் அற்றதாக உள்ளது.)*
12. *நாம் தூதர்களை வணங்க வேண்டுமா? முக்கியமான மதத் தலைவர்களுக்கு முன்பாக நாம் பணிந்து கொள்ள வேண்டுமா? ஏன்?*
13. *‘‘இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது’’ என்ற வாக்கியத்தின் சாத்தியக்கூறான சில அர்த்தங்களைப் பற்றிக் கலந்துரையாடவும்.*



**ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து (19: 7-9)**